# ஒட்டன்சத்திரம் நகராட்சி

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 67 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.29.06.2017–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் அவசரக் கூட்டம் நாள். 15.06.2018 (வெள்ளிக் கிழமை) அன்று காலை 11.00 மணியளவில் நடைபெற்றது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 14.06.2018

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**பொருள் :1**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 10 வது வார்டு பகுதியில் முருகன் திருமண மண்டபம் முதல் அக்சயா பள்ளி வரை வடிகால் வசதி இல்லாததால் கழிவு நீர் மற்றும் மழைநீர் சாலையின் நடுவிலேயே தேங்கி நின்று பொது சுகாதாரக்கேட்டினை ஏற்படுத்திவிடுவதுடன், பொதுமக்களின் அன்றாட வாகன போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்களின் பொது சுகாதார நலன் கருதி அப்பகுதியில் மழைநீர் வடிகால் கட்ட தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் பொது சுகாதார நலன் கருதி அப்பகுதியில் மழைநீர் வடிகால் கட்ட தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது, மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 106**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் :2**

ஒட்டன்சத்திரம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016–ன்படி (SWM – USER CHARGE) திடக்கழிவு மேலாண்மை பயனீட்டாளர் கட்டணம் விபரம் வெளியிடப்பட்டது. அதில் சில இனங்கள் விடுபட்டுள்ளன அதை கீழ்க்கண்ட பட்டியலில் உள்ளவற்றை இணைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள

| வ. எண் | பொருள் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | இரும்பு, பெயிண்ட், சிமெண்ட் விற்பனை | 50.00 |
| 2 | பேன்ஸி ஸ்டோர் (வலையல் + பாசி கடை) | 50.00 |
| 3 | டூ வீலர், போர் வீலர், ஒர்க் ஷாப் பேட்டரி, பஞ்சர் கடை | 50.00 |
| 4 | ஏலக்ட்ரிக் + எலக்ட்ரானிக்ஸ் வயரிங் பொருட்கள், செல், வாட்ச் மற்றும் இதர மின் சாதனங்கள் | 50.00 |
| 5 | கிளினிக், லேப், மெடிக்கல்ஸ் | 50.00 |
| 6 | ஷோரூம் (துங்கம், வெள்ளி, எலக்ட்ரானிக்ஸ் | 100.00 |
| 7 | மரக்கடை, பர்னிச்சர் ஷோரூம் | 100.00 |
| 8 | துணிக்கடை சிறியது | 150.00 |
| 9 | துணிக்கடை பெரியது | 100.00 |
| 10 | 600 சதுர அடிக்கு குறைவாக மளிகைக் கடை, பேக்கரி மற்றும் டிபன் சென்டர் | 100.00 |
| 11 | ஹோட்டல் (500 சதுர அடி) | 200.00 |
| 12 | சாலைவோர கடைகள் (தரை விரிப்பு மற்றும் தள்ளு வண்டிகள்) | 50.00 |
| 13 | 100 சதுர அடிக்கு குறைவாக உள்ள அனைது கடைகளும் | 50.00 |
| 14 | 500 சதுர அடிக்கு குறைவாக உள்ள பழம், ஜீஸ், ஐஸ்கிரீம் கடைகள் | 100.00 |
| 15 | 500 சதுர அடிக்கு குறைவாக உள்ள இறைச்சி கடைகள் (கடை மற்றும் புறம்போக்கு இடம் அனைத்தும்) | 200.00 |
| 16 | 20 (BED) படுக்கை அறைக்கு குறைவாக உள்ள மருத்துவமனைகள் | 300.00 |
| 17 | 500 மாணவ – மாணவியர்க்கு குறைவாக தனியார் கல்வி கூடம் | 300.00 |
| 18 | 501 முதல் 1000 மாணவ – மாணவியர் உள்ள தனியார் கல்விக் கூடம் | 500.00 |

மேற்கண்டவாறு 1 முதல் 18 இனங்கள் புதிதாக பட்டியலில் இணைத்து நாளிதழில் வெளியீடு செய்து பொதுமக்களின் ஆட்சேபணை கோர தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 107**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் :3</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான காந்தி தினசரி சந்தையில் உள்ள 1 முதல் 151 கடைகள், பேருந்து நிலைய கார் ஸ்டாண்ட் பின்புறம் உள்ள IUDP கீழ்தள கடைகள் 1 முதல் 10 கடைகள் மற்றும் பேருந்து நிலைய கார் ஸ்டாண்ட் பின்புறம் உள்ள IDSMT மேல் மாடி கடைகள் 1 முதல் 9 கடைகள் ஆக மொத்தம் 170 கடைகளுக்கு 01.04.2009 முதல் 31.03.2018 முடிய 9 ஆண்டு அனுபவ உரிமக் காலம் 31.03.2018–ம் நாளுடன் முடிவுறும் நிலையில் அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி4) துறை நாள்.03.07.2007–ம்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.15316/2016/ஆர்3. நாள்.30.11.2016 மற்றும் 15.12.2016 கடித வழிகாட்டுதலின்படியும் மேற்படி கடையினை ஒப்பந்ததாரர் விரும்பும் நிலையில் குத்தகை வாடகை மறுசீராய்வு செய்து நிர்ணயம் செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.616/2016/ஆர்2 நாள்.05.01.2018–ன்படி கண்காணிப்பு குழு ஏற்படுத்தப்பட்டு மேற்படி குழுவால் அங்காடி மதிப்பீடு பொதுப்பணித் துறை மற்றும் பத்திரப் பதிவுத் துறையின் வழிகாட்டுதலின் அடிப்படையில் கணக்கீடு செய்து வாடகை மறுசீராய்வு செய்ய கண்காணிப்பு குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டதில் 13.06.2018–ம் நாளில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அலுவலகத்தில் நடைபெற்ற கண்காணிப்பு குழு கூட்டத்தில் மேற்காண் கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்ய நகராட்சியால் கணக்கீடு செய்யப்பட்ட விபரம் ஆய்வு செய்யப்பட்டது. இதன்படி, IUDP தரைத்தளத்திலுள்ள 10 கடைகள், முதல் தளத்திலுள்ள 9 கடைகள் மற்றும் காந்தி தினசரி சந்தைலுள்ள 151 கடைகள் ஆக மொத்தம் 170 கடைகளுக்கு அங்காடி மதிப்பீடு மற்றும் பொதுப்பணித்துறை மற்றும் பத்திர பதிவுத்துறை மூலம் பெறப்பட்ட வழிகாட்டு மதிப்பீடு ஆகியவற்றுடன் கணக்கீடு செய்யப்பட்டு அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டின்படி கடைகளுக்கான குத்தகை தொகை கலம் 16–ல் கண்டவாறு கண்காணிப்புக் குழு வாடகை நிர்ணயம் செய்ய கண்காணிப்புக்குழு கூட்டம் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து மேற்படி கடைகளுக்கு கீழ்க்காணும் பட்டியலில் உள்ளவாறு வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டது மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| காந்தி மார்க்கெட் கடைகள் 1 முதல் 151 முடிய | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ. எண் | கடை எண் | மறு சீராய்வு செய்யப்பட்ட மாத வாடகை | | வ. எண் | கடை எண் | மறு சீராய்வு செய்யப்பட்ட மாத வாடகை |
| 1 | 1 | 6180 | | 17 | 17 | 7415 |
| 2 | 2 | 6180 | | 18 | 18 | 7785 |
| 3 | 3 | 6180 | | 19 | 19 | 7785 |
| 4 | 4 | 6180 | | 20 | 20 | 4945 |
| 5 | 5 | 12360 | | 21 | 21 | 10505 |
| 6 | 6 | 6180 | | 22 | 22 | 6180 |
| 7 | 7 | 6180 | | 23 | 23 | 6180 |
| 8 | 8 | 6180 | | 24 | 24 | 3090 |
| 9 | 9 | 6180 | | 25 | 25 | 9270 |
| 10 | 10 | 7415 | | 26 | 26 | 5560 |
| 11 | 11 | 17300 | | 27 | 27 | 5560 |
| 12 | 12 | 6180 | | 28 | 28 | 4325 |
| 13 | 13 | 9270 | | 29 | 29 | 5020 |
| 14 | 14 | 9270 | | 30 | 30 | 5020 |
| 15 | 15 | 24715 | | 31 | 31 | 1545 |
| 16 | 16 | 8035 | | 32 | 32 | 7260 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 33 | 33 | 7260 | | 81 | 81 | 6305 |
| 34 | 34 | 10890 | | 82 | 82 | 6830 |
| 35 | 35 | 7260 | | 83 | 83 | 6830 |
| 36 | 36 | 7260 | | 84 | 84 | 6305 |
| 37 | 37 | 14520 | | 85 | 85 | 10505 |
| 38 | 38 | 7260 | | 86 | 86 | 13440 |
| 39 | 39 | 7260 | | 87 | 87 | 4480 |
| 40 | 40 | 14520 | | 88 | 88 | 4480 |
| 41 | 41 | 10890 | | 89 | 89 | 4480 |
| 42 | 42 | 14520 | | 90 | 90 | 3355 |
| 43 | 43 | 18150 | | 91 | 91 | 6225 |
| 44 | 44 | 18150 | | 92 | 92 | 4790 |
| 45 | 45 | 7260 | | 93 | 93 | 4790 |
| 46 | 46 | 7260 | | 94 | 94 | 9580 |
| 47 | 47 | 7260 | | 95 | 95 | 4790 |
| 48 | 48 | 7110 | | 96 | 96 | 4790 |
| 49 | 49 | 7260 | | 97 | 97 | 1255 |
| 50 | 50 | 6720 | | 98 | 98 | 3090 |
| 51 | 51 | 930 | | 99 | 99 | 3090 |
| 52 | 52 | 4170 | | 100 | 100 | 3090 |
| 53 | 53 | 4170 | | 101 | 101 | 3090 |
| 54 | 54 | 4170 | | 102 | 102 | 5795 |
| 55 | 55 | 4170 | | 103 | 103 | 8110 |
| 56 | 56 | 8345 | | 104 | 104 | 8110 |
| 57 | 57 | 8345 | | 105 | 105 | 2705 |
| 58 | 58 | 4170 | | 106 | 106 | 8110 |
| 59 | 59 | 4170 | | 107 | 107 | 8110 |
| 60 | 60 | 8345 | | 108 | 108 | 5410 |
| 61 | 61 | 8345 | | 109 | 109 | 8110 |
| 62 | 62 | 8345 | | 110 | 110 | 4325 |
| 63 | 63 | 4170 | | 111 | 111 | 3785 |
| 64 | 64 | 4170 | | 112 | 112 | 6260 |
| 65 | 65 | 8345 | | 113 | 113 | 6260 |
| 66 | 66 | 8345 | | 114 | 114 | 6260 |
| 67 | 67 | 6260 | | 115 | 115 | 4170 |
| 68 | 68 | 6260 | | 116 | 116 | 4170 |
| 69 | 69 | 6260 | | 117 | 117 | 4170 |
| 70 | 70 | 6260 | | 118 | 118 | 4170 |
| 71 | 71 | 6180 | | 119 | 119 | 4170 |
| 72 | 72 | 3200 | | 120 | 120 | 4170 |
| 73 | 73 | 3060 | | 121 | 121 | 3090 |
| 74 | 74 | 10505 | | 122 | 122 | 3090 |
| 75 | 75 | 10505 | | 123 | 123 | 3090 |
| 76 | 76 | 6830 | | 124 | 124 | 3090 |
| 77 | 77 | 6305 | | 125 | 125 | 3090 |
| 78 | 78 | 10505 | | 126 | 126 | 3090 |
| 79 | 79 | 6305 | | 127 | 127 | 3090 |
| 80 | 80 | 6830 | | 128 | 128 | 3090 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 129 | 129 | 3090 | | 141 | 141 | 8035 |
| 130 | 130 | 3090 | | 142 | 142 | 8035 |
| 131 | 131 | 3090 | | 143 | 143 | 4015 |
| 132 | 132 | 3090 | | 144 | 144 | 4015 |
| 133 | 133 | 3090 | | 145 | 145 | 4015 |
| 134 | 134 | 3090 | | 146 | 146 | 4170 |
| 135 | 135 | 2630 | | 147 | 147 | 4170 |
| 136 | 136 | 5020 | | 148 | 148 | 4170 |
| 137 | 137 | 6430 | | 149 | 149 | 6675 |
| 138 | 138 | 4015 | | 150 | 150 | 3340 |
| 139 | 139 | 4015 | | 151 | 151 | 4170 |
| 140 | 140 | 5625 | | | | |

| **பேருந்து நிலைய IUDP கீழ்தள கடைகள் 1 முதல் 10 முடிய** | | | | **பேருந்து நிலைய IDSMT மேல்தள கடைகள் 1 முதல் 9 முடிய** | | |
|---|---|---|---|---|---|---|
| வ. எண் | கடை எண் | மறு சீராய்வு செய்யப்பட்ட மாத வாடகை | | வ. எண் | கடை எண் | மறு சீராய்வு செய்யப்பட்ட மாத வாடகை |
| 1 | 1 | 5496 | | 1 | 1 | 3864 |
| 2 | 2 | 4968 | | 2 | 2 | 3600 |
| 3 | 3 | 4968 | | 3 | 3 | 3600 |
| 4 | 4 | 4968 | | 4 | 4 | 5328 |
| 5 | 5 | 5136 | | 5 | 5 | 3720 |
| 6 | 6 | 4968 | | 6 | 6 | 3600 |
| 7 | 7 | 4968 | | 7 | 7 | 3600 |
| 8 | 8 | 5328 | | 8 | 8 | 3600 |
| 9 | 9 | 2904 | | 9 | 9 | 4008 |
| 10 | 10 | 2335 | | | | |

<u>அலுவலக குறிப்பு :</u>

1. அனுமதிக்கலாம்.
2. கண்காணிப்பு குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வாடகை தொகையினை 01.04.2018 முதல் நிர்ணயம் செய்து மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் வழங்க அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 108**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 4**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் தற்போது நடைமுறையில் உள்ள உரிமையாணைக் கட்டணங்கள், 2003ஆம் ஆண்டுக்கு முன் பேருராட்சியாக இருந்தபோது நிர்ணயிக்கப்பட்டு, கீழ்க்குறிப்பிட்ட கலம் 6ன்படி வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்படி உரிமக்கட்டணங்கள் தற்போதைய காலத்திற்கு மிகவும்குறைவான கட்டணங்களாக உ ள்ளது. மேலும், ஒட்டன்சத்திரம் நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக 01.10.2010 முதல் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது நகராட்சியின் உரிமையாணைக் கட்டணம் மாற்றியமைக்ககப்பட்ட கட்டணங்களை பட்டியலில் கண்டுள்ளவாறு திருத்தியமைத்திடவும், மேற்படி திருத்திய கட்டணங்களை மாவட்ட அரசிதழில் பிரசும் செய்து 01.04.2018 முதல் கட்டணங்கள் வசூல் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ஒட்டன்சத்திரம் நகராட்சி 01.04.2018 முதல் அமுலாக்கப்படும் உரிமக்கட்டண விபரம்

| வ. எண் | உரிமம் பெற வேண்டிய தொழில் விபரம் | பழைய கட்டண விகிதம் | புதிய கட்டண விகிதம் |
|---|---|---|---|
| | | ஓர் ஆண்டு உரிமம் கட்டணம் ரூபாய் | ஓர் ஆண்டு உரிமம் கட்டணம் ரூபாய் |
| 1 | 2 | 3 | 4 |
| 1 | கலர், சோடா, சர்பத் இது போன்ற பானங்களை தயாரித்தல் அல்லது சேமித்து வைத்தல் | 200 | 200 |
| 2 | அப்பளம் தயாரித்தல் விற்பனைக்காக சேமித்து வைத்தல் | 100 | 200 |
| 3 | தனியார் மது கூடம் (பார்) | 2000 | 2000 |
| 4 | எலும்பு சேமித்து வைத்தல் அல்லது விற்பனை செய்தல் | 200 | 200 |
| 5 | தவிடு சேமித்து வைத்தல் விற்பனை செய்தல் | 300 | 300 |
| 6 | செங்கல் சூளை 1க்கு | 500 | 500 |
| 7 | கற்பூரம் – மெழுகுவர்த்தி தயாரித்தல் அல்லது விற்பனை செய்தல் | 120 | 200 |
| 8 | மரக்கரி தயாரித்தல்/வைத்தல்/விற்பனை செய்தல்/விறகு கடை | 200 | 300 |
| 9 | மிளகாய் மொத்த வியாபாரம் | 300 | 300 |
| 10 | மிளகாய் சில்லரை வியாபாரம் | 200 | 200 |
| 11 | துணிகளுக்கு அச்சிடுதல் | 400 | 400 |
| 12 | நிலக்கரி சேகரித்து வைத்தல்/விற்பனை செய்தல் | 200 | 200 |
| 13 | தேங்காய் சேமித்து வைத்தல்/ சில்லரை விற்பனை | 200 | 200 |
| 14 | தோல் உரித்தல் அல்லது சேமித்து வைத்தல் அல்லது விற்பனை செய்தல் | 100 | 500 |
| 15 | பட்டாசு சேர்த்து வைத்தல் அல்லது விற்பனை செய்தல் | 800 | 1000 |
| 16 | மீன் சேகரித்தல் அல்லது விற்பனை செய்தல் | 100 | 300 |
| 17 | தானியங்கள் சேமித்தல் அல்லது மொத்த விற்பனை ( அரிசி தவிர) | 400 | 400 |
| 18 | சுண்ணாம்பு கால்வாய் ஒன்றுக்கு | 200 | 500 |
| 19 | பருப்பு வகைகள் மொத்தமாக விற்பனை செய்தல் அல்லது சேமித்து வைத்தல் | 300 | 300 |
| 20 | சாக்கு விற்பனை செய்தல் | 200 | 200 |
| 21 | ஐஸ் தயாரித்தல் அல்லது சேர்த்து வைத்தல், விற்பனை செய்தல் (இது தொடர்பான எந்தப் பொருளும் சேர்ந்தது) | 300 | 1000 |
| 22 | தங்கும் விடுதி (பள்ளி மாணவர் மாணவியர் விடுதி, லாட்ஜ் தவிர) | 600 | 1500 |
| 23 | அ) டிபன் சென்டர் மட்டும் | 300 | 300 |
| 24 | ஆ) சாப்பாட்டுடன் உள்ள டிபன்/காபி ஹோட்டல் | 600 | 600 |
| 25 | டீ,காபி பலகாரம் விற்பனை | 200 | 200 |
| 26 | பெட்டிக் கடை வியாபாரம் | 200 | 200 |
| 27 | மளிகை கடை<br>எலிகளால் வெகுவாக தின்னப்படும் பொருட்கள் விற்பனை செய்யும் இடம் – குடும்ப உபயோகத்திற்கு தேவையான உப்பு, புளி மிளகாய் பருப்பு போன்றவை விற்கும் இடம் வியாபாரம்<br>அ) பெரிய கடை | 600 | 600 |

| | | | |
|---|---|---|---|
| 28 | ஆ) சிறிய கடை | 300 | 300 |
| 29 | பல்பொருட்கள் விற்பனையாகும் சிறிய ஸ்டோர்களுக்கு (ஷாப் கடைகள் எனப்படுபவை) | 300 | 300 |
| 30 | செயற்கை உரம் தயாரித்தல் , சேமித்து வைத்தல் (சல்பேட், யூரியா பாஸ்பேட், கலப்புரம் போன்றவை விற்றல்) பூச்சி மருந்து வியாபாரம் (கிட்டங்கி உட்பட) | 70 | 200 |
| 31 | உலோகத்தால் பாத்திரங்கள் செய்தல் அல்லது விற்பனை செய்தல் | 400 | 400 |
| 32 | சோப்பு தயாரித்தல் , சோப்பு பவுடர் இது தொடர்பானவை தயாரித்தல் விற்பனைக்காக சேமித்து வைத்தல் | 500 | 500 |
| 33 | ஸ்வீட் அல்லது காரம் தயாரித்தல் விற்றல் வேக வைத்தல் | 400 | 400 |
| 34 | கீற்று அல்லது மூங்கில் கழி அல்லது பனங்கயிறு, ஓடுகள் வியாபாரம் செய்தல் | 400 | 400 |
| 35 | மரம் அறுத்தல் , சேமித்து வைத்தல் | 600 | 600 |
| 36 | வல்கனைசிங் செய்தல் (கம்பர்சர் மற்றும் ஆயில் இன்ஜின் சேர்ந்தது) | 100 | 200 |
| 37 | கேஸ் அல்லது மின்சார வெல்டிங் ஒர்க்ஸ் | 400 | 400 |
| 38 | பால் வியாபாரம் | 500 | 200 |
| 39 | நெல் அல்லது அரிசி மொத்த வியாபாரம் | 600 | 600 |
| 40 | மருந்துகடை | 600 | 600 |
| 41 | ஒலிப்பெருக்கி வைத்து தொழில் செய்தல் | 150 | 500 |
| 42 | மண்ணெண்ணை, டீசல், பெட்ரோல் இது போன்றவை மொத்த விற்பனை | 2000 | 2000 |
| 43 | இறைச்சி வியாபாரம் ஸ்டால் ஒன்றுக்கு – இரண்டு பணியாட்கள் | 200 | 300 |
| 44 | பட்டாணி , நிலக்கடலை அல்லது வேறு கடலைகள் பொறிககள், வறுத்தல் விற்றல் | 200 | 300 |
| 45 | இரும்பு அல்லது மரமேஜைகள், நாற்காலிகள் பீரோ மற்றும் இதர பொருட்கள் பர்னிச்சர்கள் தயாரித்து சேர்த்து வைத்தல், விற்பனை செய்தல் | 300 | 600 |
| 46 | சிமெண்ட் வியாபாரம் | 1000 | 1000 |
| 47 | சிமெண்டினால் ஆன தொட்டிகள் , பைப்புகள் மற்றும் இதர பொருட்கள் விற்பனைக்காக சேமித்து வைத்தல்,விற்பனை செய்தல் | 200 | 400 |
| 48 | நாட்டுச் செக்கு, மின் செக்கில் எண்ணெய் பிழிந்து எடுத்தல், விற்பனை செய்தல் | 200 | 300 |
| 49 | மிட்டாய் தயாரிப்பது, விற்பனை செய்வது | 100 | 400 |
| 50 | சைக்கிள் சாமான்கள் விற்பனை செய்யுமிடம் | 400 | 400 |
| 51 | மின்சாரப் பொருட்கள் அல்லது பைப்பு சாமான்கள் , பிளாஸ்டிக் பொருட்கள் விறப்னை செய்யுமிடம் | 500 | 500 |
| 52 | ஆட்டோ மொபைல்ஸ் பழுது பார்த்தல், சர்வீஸ் செய்தல், வர்ணம் பூசுதல் எவையேனும் செய்தல் | 400 | 400 |
| 53 | வெற்றிலை வியாபாரம் | 100 | 100 |
| 54 | மொசைக்கல் தயாரித்தல் அல்லது விற்பனை செய்தல் (டைல்ஸ்) | 400 | 400 |
| 55 | படங்களுக்கு கண்ணாடி போடும் கடை வைத்தல் | 200 | 200 |
| 56 | அ ச்சகம் நடத்துதல் | 400 | 400 |
| 57 | ரொட்டி கிடங்கு அல்லது பிஸ்கட் பாக்டரி எதுவாயினும் | 200 | 400 |
| 58 | துணிகள் சேமித்து ஏற்றுமதி செய்யும் நிறுவனங்கள் (ஜவுளி கடை) | 600 | 600 |
| 59 | துணிகள் சேமித்து , ஏற்றுமதி செய்யும் நிறுவனங்கள் சிறியது | 500 | 200 |
| 60 | நட்சத்திர அந்தஸ்து உள்ள தங்கும் அறைகளுடன்கூடிய ஹோட்டல் | 2000 | 2000 |
| 61 | கல்யாண மண்டபம் | 2000 | 2000 |
| 62 | வெண்ணை நெய் தயார் செய்து விற்பனை | 1000 | 1000 |
| 63 | காய்கறி கடை மொத்த விற்பனை | 400 | 400 |
| 64 | இரு சக்கர வாகன பழுது பார்த்தல் | 200 | 200 |
| 65 | செருப்பு கடை | 300 | 300 |

## பாகம் –2

## மின் சக்தியிலானவை

| வ. எண் | விபரம் | நிறுவுதல் கட்டணம் | | உரிமம் கட்டணம் | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | பழைய கட்டணம் | புதிய கட்டணம் | பழைய கட்டணம் | புதிய கட்டணம் | |
| 1 | எத்தனை குதிரை வேகமாயினும் வீட்டுக் காரியங்களுக்கு எத்தனை குதிரை வேகமாயினும் சினிமாக்காரியத்திற்கு ரெக்டிபயர் மட்டும் | 1.00 | 5.0 | 1.00 | 5.00 | |
| 2 | மற்றவைகட்கு 1 குதிரை வேகத்திற்கு மேற்படாததற்கு | 1.00 | 5.00 | 1.00 | 5.00 | |
| 3 | 1 குதிரை வேகத்திற்கு மேல் 5குதிரை வேகம் வரை | 5.00 | 10.00 | 5.00 | 10.00 | |
| 4 | 5 குதிரை வேகத்திற்கு மேல் 10 குதிரை வேகம் வரை | 15.00 | 30.00 | 15.00 | 30.00 | |
| 5 | 10 குதிரை வேகத்திற்கு மேல் 15 குதிரை வேகம் வரை | 25.00 | 50 | 25.00 | 50.00 | |
| 6 | 20 குதிரை வேகத்திற்கு மேல் 30 குதிரை வேகம் வரை | 40.00 | 80 | 40.00 | 80.00 | |
| 7 | 30 குதிரை வேகத்திற்கு மேல் 40 குதிரை வேகம் வரை | 50.00 | 100 | 50.00 | 100.00 | |
| 8 | 40 குதிரை வேகத்திற்கு மேல் 50 குதிரை வேகம் வரை | 75.00 | 150 | 75.00 | 150.00 | |
| 9 | 50 குதிரை வேகத்திற்கு மேல் 100 குதிரை வேகம் வரை | 100.00 | 200 | 100.00 | 200.00 | |
| 10 | 100 குதிரை வேகத்திற்கு மேல் 200 குதிரை சக்திக்கு மேற்பட்டால் | 100 குதிரை சக்திக்கு ரூ. 500மற்றும் அதிகப்படியான ஒவ்வொரு குதிரை சக்திக்கு ரூ.5.00 வீதம் வசூலிக்கப்படும் | | | | |
| 11 | 200 குதிரை சக்திக்கு மேல் 500 குதிரை சக்திக்கு மேற்படாமல் | 200 குதிரை சக்திக்கு ரூ. 1000.00 மற்றும் கூடுதல் ஒவ்வொரு குதிரை சக்திக்கும் ரூ.5.00 வீதம் வீதம் வசூலிக்கப்படும் | | | | |
| 12 | 500 குதிரை சக்திக்கு மேல் | 500 குதிரை சக்திக்கு ரூ.2500 மற்றும் கூடுதல் ஒவ்வொரு குதிரை சக்திக்கும் ரூ.5.00 வீதம் வீதம் ரூ. 3500க்கு மேற்படாமல் | | | | |

## மின்சாரமில்லாதவை

| வ. எண் | விபரம் | நிறுவுதல் கட்டணம் | | உரிமம் கட்டணம் | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | பழைய கட்டணம் | புதிய கட்டணம் | பழைய கட்டணம் | புதிய கட்டணம் | |
| 1 | எத்தனை குதிரை வேகமாயினும் வீட்டுக் காரியங்களுக்கு எத்தனை குதிரை வேகமாயினும் சினிமாக்காரியத்திற்கு ரெக்டிபயர் | 0.50 | 5.00 | 0.50 | 5.00 | |
| 2 | மற்றவைகட்கு 1 குதிரை வேகத்திற்கு மேற்படாததற்கு | 1.50 | 5.00 | 1.50 | 5.00 | |
| 3 | 1 குதிரை வேகத்திற்கு மேல் 5குதிரை வேகம் வரை | 7.50 | 15.00 | 7.50 | 15.00 | |
| 4 | 5 குதிரை வேகத்திற்கு மேல் 10 குதிரை வேகம் வரை | 22.50 | 50.00 | 22.50 | 50.00 | |
| 5 | 10 குதிரை வேகத்திற்கு மேல் 15 குதிரை வேகம் வரை | 35.00 | 70.00 | 35.00 | 70.00 | |
| 6 | 20 குதிரை வேகத்திற்கு மேல் 30 குதிரை வேகம் வரை | 60.00 | 120.00 | 60.00 | 120.00 | |
| 7 | 30 குதிரை வேகத்திற்கு மேல் 40 குதிரை வேகம் வரை | 75.00 | 150.00 | 75.00 | 150.00 | |
| 8 | 40 குதிரை வேகத்திற்கு மேல் 50 குதிரை வேகம் வரை | 100.00 | 200.00 | 100.00 | 200.00 | |
| 9 | 50 குதிரை வேகத்திற்கு மேல் 100 குதிரை வேகம் வரை | 100.00 | 200.00 | 100.00 | 200.00 | |
| 10 | 100 குதிரை வேகத்திற்கு மேல் 200 குதிரை சக்திக்கு மேற்பட்டால் | 100 குதிரை சக்திக்கு ரூ. 500மற்றும் அதிகப்படியான ஒவ்வொரு குதிரை சக்திக்கு ரூ.5.00 வீதம் வசூலிக்கப்படும் | | | | |
| 11 | 200 குதிரை சக்திக்கு மேல் 500 குதிரை சக்திக்கு மேற்படாமல் | 200 குதிரை சக்திக்கு ரூ. 1000.00 மற்றும் கூடுதல் ஒவ்வொரு குதிரை சக்திக்கும் ரூ.5.00 வீதம் வீதம் வசூலிக்கப்படும் | | | | |
| 12 | 500 குதிரை சக்திக்கு மேல் | 500 குதிரை சக்திக்கு ரூ.2500 மற்றும் கூடுதல் ஒவ்வொரு குதிரை சக்திக்கும் ரூ.5.00 வீதம் வீதம் ரூ. 3500க்கு மேற்படாமல் | | | | |

1920–வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 250–வது பிரிவின் படி அடியிற் கண்ட இயந்திரங்கள் ஸ்தாபிதம் மற்றும் உரிமக் கட்டணம் (தனித்தனியாக)

| வ.எண் | விபரம் | ஓர் ஆண்டு உரிமக் கட்டணம் ரூபாய் | |
|---|---|---|---|
| | | பழைய கட்டணம் | புதிய கட்டணம் |
| 1 | ஆர்க் , வெட்டிங் , காஸ், வெல்டிங் இயந்திரம் ஒன்றுக்கு | 100 | 200 |
| 2 | கடைசல் லேத் ஒன்றுக்கு | 150 | 300 |
| 3 | டிரில்லிங் இயந்திரம் ஒன்றுக்கு | 50 | 100 |
| 4 | பாலிஷி லேத் ஒன்றுக்கு | 100 | 200 |
| 5 | சானை பிடிக்கும் இயந்திரம் ஒன்றுக்கு | 100 | 200 |
| 6 | மெட்டல் கட்டிங் இயந்திரம் ஒன்றுக்கு | 100 | 200 |
| 7 | காற்றாடி இயந்திரம் ஒன்றுக்கு | 100 | 200 |
| 8 | டிகார்டி கேட்டர் ஒன்றுக்கு | 80 | 160 |
| 9 | அரிசி ஹல்லர் ஒன்றுக்கு | 120 | 240 |
| 10 | மாவு அரைக்கும் ஹல்லர் ஒன்றுக்கு | 50 | 100 |
| 11 | காப்பித்தூள், மிளகாயத்தூள் அரைக்கும் கிரைண்டர் அல்லது ஊறவைத்தஅரிசியை , அரைக்கும் கிரைண்டர் ஒன்றுக்கு | 50 | 100 |
| 12 | எக்ஸ்பெல்லர் ஒன்றுக்கு | 200 | 400 |
| 13 | ரோட்டரி அல்லது பிண்டோ எண்ணெய் செக்கு ஒன்றுக்கு | 50 | 100 |
| 14 | குளிர்சாதனப்பெட்டி ஒன்றுக்கு | 50 | 100 |
| 15 | இவை போன்ற இதர இணை மிஷனரி ஒவ்வொன்றுக்கும் | 100 | 200 |

| PART-III | | பாகம் 3 | |
|---|---|---|---|
| Item No | PURPOSE | வகை எண் | தொழில்கள் |
| | Fees for licences or permission or insatallation for trades an electrical or non-electrical machinery for the period below one year have been fixed as follows. | | ஓராண்டுக்கு குறைந்த காலங்களுக்கு நடக்கப்படும் வியாபாரத்திற்கோ அல்லது வியாபாரங்களுக்கோ மின்சாரம் அல்லது மின்சாரமில்லாத இயந்திரங்களை ஓட்டுவதற்கோ அல்லது ஏற்படுத்துவதற்கோ பின் கண்ட ரீதியில் உரிமையாணைக்கோ அல்லது உரிமையாணை பெறவோ உரிமையாணை கட்டணம் விதித்து வசூல் செய்யப்படும். |
| A | Fees for the period below 30 days -25% of the licences fee fixed for the year . | அ | 30 நாட்களுக்கு மேற்படாத காலத்திற்கு உரிமையாணை கட்டணம் ஆண்டு கட்டணத்தில் 25 சதவிகிதம் |
| B | Fees for the period below 6 Months -50% of the annual rate. | ஆ | 6 மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கு உரிமையாணை கட்டணம் ஆண்டு கட்டணத்தில் 50 சதவிகிதம் |
| C | Fees for the period below 9 Months and above Six months -75% of the annual rate. | இ | 6 மாதங்களுக்கு மேலும் 9 மாதங்களுக்கு குறைவான காலத்திற்கு உரிமையாணை கட்டணம் ஆண்டு கட்டணத்தில் 75 சதவிகிதம் |

<u>அலுவலக குறிப்பு–</u>

கட்டண உயர்வு செய்து ஐந்து ஆண்டுகள் முடிவுற்ற நிலையில் நகராட்சியின் வருவாயை கருத்தில் கொண்டு மேற்காணும் பட்டியலில் கலம் 4ல் குறிப்பிட்டுள்ளவாறு உயர்வு செய்த கட்டணம் நிர்ணயம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 109**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் . 5**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான நாகணம்பட்டி புறவழி சாலையில் உள்ள பூங்கா இடத்தில் On site Composting செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் நகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடத்தில் On site Composting நுண் உயிர் உரம் தயாரிக்க அறிவுறுத்தப்பட்டது. சித்தர் கோவில் எதிர்புறம் உள்ள இடத்தினை On site Composting வசதி செய்வதற்கு சுற்றுச்சுவர், தொட்டிகள் மற்றும் கூரை வசதிகள் செய்வதற்கு ஆகும் மதிப்பீடு ரூ.9.75 இலட்சம் நிர்வாக அனுமதி கோரி தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ளவும், நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 110**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் . 6**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான 17வது வார்டு பகுதியில் உள்ள எரிவாயு தகன மேடை வளாகத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் On site Composting செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் On site Composing-ல் நுண் உயிர் உரம் தயாரிக்க அறிவுறுத்தப்பட்டது. எரிவாயு தகன மேடை வளாகத்தில் உள்ள இடத்தினை On site Composting வசதி செய்வதற்கு தொட்டிகள் மற்றும் கூரை ஆகியவற்றை செய்வதற்கு ஆகும் மதிப்பீடு ரூ.6.50 இலட்சம் நிர்வாக அனுமதி வேண்டி தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ளவும், நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 111**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் . 7**

நகராட்சி நிர்வாக இணை ஆணையர் சென்னை அவர்கள் தலைமையில் 04.06.2018– அன்று நடைபெற்ற பூங்கா இடங்களை பாதுகாத்தல் தொடர்பான கூட்ட நடவடிக்கைகள் சுருக்க குறிப்பில் நகராட்சிக்குட்பட்ட இடங்களில் அமைந்துள்ள பூங்காக்கள், விளையாட்டுமிடங்கள் மற்றும் திரவிடங்கள் அனைத்தும் ஆக்கிரமிப்பு ஆவதனை தவிர்த்திட முதற்கட்டமாக பாதுகாப்பு வேலி அமைத்து நகராட்சிக்கு சொந்தமான இடம் என பெயர்பலகை நிறுவி 29.06.2018–க்குள் எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரத்தினை தெரிவித்திட அறிவுறுத்தப்படுகிறது.

அதனை தொடர்ந்து நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பூங்கா இடங்கள் ஏற்கனவே பாதுகாப்பு வேலி அமைத்துள்ளது. போக மீதமுள்ள கீழ்காணும் இடங்களில் பாதுகாப்பு வேலி பணிகள் செய்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு, தனி அலுவலரின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ஒட்டன்சத்திரம் நகராட்சி வார்டு எண்–1 நாகணம்பட்டி , வார்டு எண் –4 செக்போஸ்ட் மலைப்பிரிவு மற்றும் சொசைட்டி காலனி ஆகிய பூங்கா இடங்களில் பாதுகாப்பு வேலி அமைத்தல். | ரூ.7.50 |
| 2 | ஒட்டன்சத்திரம் நகராட்சி – வார்டு எண்–8 நல்லகவுண்டன் நகர்(I,II) மற்றும் வார்டு எண் – 12 கஸ்துாரி நகர் பூங்கா இடங்களில் பாதுகாப்பு வேலி அமைத்தல். | ரூ.6.50 |
| 3 | ஒட்டன்சத்திரம் நகராட்சி வார்டு எண்–10 தாராபுரம் சாலை மேற்கு வார்டு எண் –18 புதிய ஹசிங் போர்டு பூங்கா இடங்களில் பாதுகாப்பு வேலி அமைத்தல். | ரூ.6.50 |

**அலுவலக குறிப்பு:**

1. 2018–19–ம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.
2. அவசர அவசியம் கருதியும், குறித்த காலத்திற்குள் பணியினை முடித்து நகராட்சி நிர்வாக இணை ஆணையர் சென்னை அவர்களிடம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால், மேலும் கால தாமதம் ஆவதினை தவிற்கும் பொருட்டு, மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்வதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 112**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் . 8**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 8 மற்றும் 12 வது வார்டு பகுதிகளில் உள்ள பூங்கா இடங்களில் பாதுகாப்பு வேலி அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.4.00 இலட்சம் நிர்வாக அனுமதி வேண்டி தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்கள் நலன் கருதி பணியினை மேற்கொண்டு அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்

**தீர்மான எண். 113**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் . 9**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 10 மற்றும் 18 வது வார்டு பகுதிகளில் உள்ள பூங்கா இடங்களில் பாதுகாப்பு வேலி அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.4.00 இலட்சம் நிர்வாக அனுமதி வேண்டி தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்கள் நலன் கருதி பணியினை மேற்கொண்டு அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்

**தீர்மான எண். 114**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்.10**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில், தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2017–2018ன் கீழ் ரூ.800.00 லட்சம் மதிப்பீட்டில் நான்கு தொகுப்புகளுக்கு சாலைப் பணிகள் மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறைக்கடிதம் ந.க.எண்.21422/2017/இ3 நாள் 03/10/2017–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் நான்கு தொகுப்புகளுக்கும். தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் செயல்முறைக் கடிதம் ந.க.எண்.24545/2017//DO2 நாள் 14.11.2017–ல் தொழில் நுட்ப அமைதியும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நான்கு தொகுப்புகளுக்கும் 11.12.2017–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், மூன்று தொகுப்புகளுக்கு மட்டும் (I,II,III) ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று 16/02/2018–ல் பணி உத்திரவுகள் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. நான்காவது தொகுப்பிற்கு முறையே 11.12.2017,15.03.2018,19.04.2018, ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டும், ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறவில்லை. மேற்படி நான்காவது தொகுப்பில், தார்சாலை 1500 மீடரும் பேவர்பிளாக் சாலை–2190 மீட்டருக்கும் பணி செய்திட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத்தொகுதி உறுப்பினர் தனது 05.05.2018ம் தேதிய கடிதத்தில், கீழ்காணும் சேதமடைந்ததும், போக்குவரத்திற்கு பொதுமக்கள் மற்றும் வாகனம் அதிகம் பயன்படுத்தும், கீழ்காணும் சாலைகளை அத்யாவசியமாக தேர்வு செய்து பணி செய்திடும்படி பரிந்துரை கடிதம் அளித்துள்ளது. தனி அலுவலரின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது. திண்டுக்கல் சாலை கொங்கு நகர், கருவூலக காலனி, தீரன் சின்னமலை நகர், சொசைட்டி காலனி மெயின் மற்றும் குறுக்கு தெருக்கள், ஏ.எம்.கே. நகர், காவேரி நகர், காளியம்மன் கோவில் குறுக்கு தெருகள், வினோபா நகர், காந்தி மார்க்கெட் பைப்பாஸ் சாலை, மார்க்கெட் பைப்பாஸ் முதல் ஏ.ஆர்.எஸ்.காம்பளக்ஸ் முடிய, தும்மிச்சம்பட்டி தாராபுரம் சாலை முதல் முத்தாலம்மன் கோவில் முடிய தார் சாலைகள், குறிஞ்சி நகர் பகுதிகளுக்கு தார்சாலை அமைக்கும் பணி. வார்டு எண்கள்: 3, 4, 5, 6, 7, 9, 10, 11, 18.

| | | |
|---|---|---|
| தார்சாலை நீளம் | : 4.050 கி.மீ | ரூ.200.00 லட்சம் |
| பேவர் பிளாக் சாலை நீளம் | : 0.500 கி.மீ | |

ஏற்கனவே நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட நான்காம் தொகுப்பிற்கு மூன்று முறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரியும், ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறாத நிலையில், மாற்று பணியாக மேற்காணும் பணிகள் தேர்வு செய்தது தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மேற்காணும் மதிப்பீட்டிற்கு கருத்துரு தயார் செய்து திருத்திய நிர்வாக அனுமதி பெற நகாரட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களுக்கு சமர்பித்து மேல் நடவடிக்கை தொடரலாம்.

**தீர்மான எண். 115**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண் –11</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2–வது வார்டு பெரியாஞ்செட்டிபட்டி பகுதியில் வசித்து வரும் திரு.கே.ராதாகிருஷ்ணன் மற்றும் வி.பெரியசாமி என்பவர்களால் 2–வது வார்டு சூரியா கார்டன், பெரியாஞ்செட்டிபட்டியில் உள்ள குடியிருப்பு வீட்டிற்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவது தொடர்பாக நகராட்சி மீது சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். W.P(MD)No.19027/2017–ன்படி 23.10.2017–ல் இந்நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்தி தீர்ப்பாணை பெற்றுக் கொடுத்தமைக்கு கட்டணமாக ரூ.7500/– வழங்க கேட்டு அரசு வழக்கறிஞர் திரு.ஜெ.குணசீலன்முத்தையா அவர்களிடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1713/2014/இ1)

**தீர்மான எண். 116**

அனுமதிக்கப்பட்டது.

இடம். ஒட்டன்சத்திரம்.
நாள். 14.06.2018

தனிஅலுவலர்
மற்றும் ஆணையாளர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி.

## ஒட்டன்சத்திரம் நகராட்சி

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 67 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.29.06.2017–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் அவசரக் கூட்டம் நாள். 29.06.2018 (வெள்ளிக் கிழமை) அன்று காலை 11.00 மணியளவில் நடைபெற்றது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 28.06.2018

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**பொருள் – 1**

மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 3692/2017/அ5 நாள்.25.04.2018 –ன்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் – 2017–2018ம் நிதியின் கீழ் 4 வது வார்டு கபர்ஸ்த்தான் (மயாணம்) கிழக்கு மற்றும் வடக்கு பகுதியில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிகளுக்காக 18.06.2018–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. பி.வேலுச்சாமி | 0.03 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.ஆர். ரங்கசாமி | 2.11% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1–ல் உள்ள ஒப்பந்ததாரரிடம் இருந்து மட்டும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி ஒப்பந்ததாரர் திரு. பி.வேலுச்சாமி என்பவர் 0.03% மதிப்பீட்டு விலையில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு. பி.வேலுச்சாமி என்பவரின் 0.03 மதிப்பீட்டு விலையில் குறைவான ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை அனுமதிக்கலாம். (ந.க.எண். 51/2017/இ1)

**தீர்மான எண். 117**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்– 2**

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் கோடை விழா 2018 57–வது மலர் கண்காட்சியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 19.05.2018–ம் நாள் துவக்கி வைத்ததை தொடர்ந்து மேற்படி விழாவிற்கு நகராட்சி சார்பாக செய்தி மக்கள் தொடர்புதுறை திண்டுக்கல் அவர்களின் ந.க.எண்.150/செ.ம.தொ/2018 நாள்.18.05.2018–ம் நாளைய பரிந்துரையின்படி சிறப்பு மலர் வெளியிடு செய்தமைக்காக கீழ்காணும் நாளிதழ் நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்றுள்ள பட்டியல் அனுமதிக்கு.

| வ. எண் | விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | தினபூமி | ரூ.21,000/– |
| 2 | தினசங்கு | ரூ.15,000/– |

**அலுவலகக்குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்
2. கொடைக்கானல் கோடைவிழா 2018 மற்றும் 57–வது மலர் கண்காட்சியின் சிறப்பு மலராக வெளியீடு செய்த மேற்படி நாளிதழ்களின் பட்டியல் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 118**

அனுமதிக்கப்பட்டது.

## பொருள்– 3

ஒட்டன்சத்திரம் நகராட்சி 3வது வார்டு வையாபுரி லைன், கருவூல காலனி, நாகணம்பட்டி சாலை, தீரன் சின்னமலை நகர் முதல் தீயணைப்பு நிலையம் வரை உள்ள பகுதிகளில், குடிநீர் பகிர்மானக் குழாய் விஸ்தரிப்பு செய்திட ரூ.5.00 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு மன்றம் தனது 15.06.2016–ம் தேதிய 131–ம் எண் தீர்மானத்தில் நிர்வாக அனுமதி அளித்துள்ளது. மேற்கண்ட பணிக்கு 23.08.2016–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி.வீராச்சாமி என்பவருக்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.184 நாள்.22.09.2018–ன்படி பணி உத்தரவு வழங்கப்பட்டது.

இந்நிலையில், விருப்பாட்சி தலையூத்து தலைமை நீரேற்று நிலைய நீராதாரமான பரப்பலாறு அணை மார்ச்–2017 மாதத்தில் வறண்டு போனதால், வறட்சியினை சமாளித்து தொடர்ந்து பொதுமக்களுக்கு லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்திட இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஏழு இடங்களில் ஆழ்குழாய் கிணறு அமைத்து பவர் பம்ப் பொருத்திட மதிப்பீடு தயார் செய்து பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி ஏழு இடங்களில் ஒன்றான கொல்லப்பட்டி குளம் பகுதியில் ஆழ்குழாய் கிணறு ரூ.3.70 இலட்சம் செலவில் 03.05.2017–ல்அமைக்கப்பட்டு மின் இணைப்பு பெறப்பட்டது.

இந்நிலையில் மேற்படி ஆழ்குழாய் கிணற்றினை பயன்படுத்தி, நாகணம்பட்டி மேல் நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு நீரேற்றம் செய்திட பிரதான மெயின் குழாய் சுமார் 2350.00 மீட்டர் நீளத்திற்கு பதிக்க வேண்டியுள்ளது. அவசர அவசியம் கருதி, பொது மக்களுக்கு குடிநீர் தொடர்ந்த வழங்க வேண்டியதன் அவசியம் கருதியும், 22.09.2016–ல் பணி ஆணை வழங்கப்பட்டதும், ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டு பணியினை கைவிட்டு , தற்போதைய தேவைப்படும் அவசியப் பணியான கொல்லப்பட்டி குளம் முதல் நாகணம்பட்டி வரை பிரதான மெயின் குழாய் பதித்திட ஒப்பந்ததாரர் திரு.பி.வீராச்சாமி என்பவர் மூலம் அந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் பணி செய்திட தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. ஆவசர அவசியம் கருதியும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்த்திடவும், மாற்று இடத்தில் பணி செய்திடும் திருத்திய மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 119**

அனுமதிக்கப்பட்டது.

## பொருள்– 4

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் அதிக அளவில் கால்வாய்கள், புதர்கள் மற்றும் பொது சுகாராதத்திற்கு குப்பை கொட்ட இடமின்றி மாற்று இடங்களில் கொட்டப்பட்டு அதனை அள்ள தூர் வார வேண்டியுள்ளது. அதற்காக தனியார் நிறுவனத்திடமிருந்து வாடகைக்கு JCB இயந்திரம் மூலம் தூர் வாரப்படுகிறது. இந்நகராட்சிக்கு குப்பை கிடங்கு இல்லை என்பதால், Back hoe loader (JCB) இயந்திரம் மூலம் அதிக அளவில் தூர் வாரபடுவதால், பொதுசுகாதார பயன்பாட்டின் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் இந்நகராட்சிக்கு Back hoe loader (JCB) இயந்திரம் ஒன்று புதியதாக தொகை ரூ.30.00 இலட்சத்தில் வாங்கிக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் கருத்துரு சமர்ப்பித்து நிர்வாக அனுமதி பெற்றுக்கொள்ள தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பொது மக்களின் அவசர அவசியம் கருதியும், புதியதாக Back hoe loader (JCB) வாகனம் வாங்கிக்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் பிரேரணை சமர்ப்பித்து நடவடிக்கை மேற்கொள்ளளாம்.

**தீர்மான எண். 120**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்– 5</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அலுவலக பணிகளுக்காக உள்ளூர் மற்றும் வெளியூர் பயணங்கள் மேற்கொள்ளும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 2018–2019ஆம் ஆண்டிற்கான பயணப்படி செலவினமாக உத்தேச செலவினத் தொகை ரூ.3.00 இலட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 121**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்: 6</u>**

இந்நகராட்சியின் 2016–2017–ம் ஆண்டின் ஆண்டுக் கணக்குகள் தயார் செய்து உள்ளாட்சிநிதி தணிக்கை துறைக்கு சமர்ப்பிக்க வேண்டியதன் அவசர அவசியம் கருதி, தனியார் பட்டயக் கணக்கர் திரு.வி.சீனிவாசன் அவர்கள் மூலம் 2016–2017–ம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்கு தயார் செய்யப்பட்டு உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டது அதன்படி இந்நகராட்சியின்2016–2017–ம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கையும் இந்நகராட்சியல் பெறப்பட்டு விட்டது. ஆகவே மேற்கண்டவாறு திரு.வி.சீனிவாசன் தனியார் பட்டயக் கணக்கர் அவர்களால் தயார் செய்யப்பட்ட 2016–2017–ம் ஆண்டு கணக்கிற்கான செலவு தொகை ரூ.30,000/– இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க தனி அலுவலர் அவர்களின் மேலான அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1.அனுமதிக்கலாம்

(ந.க.எண்.468/2017/பி1)

**தீர்மான எண். 122**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 7**

ஒட்டன்சத்திரம் நகராட்சி சிறப்பு நிலை பேரூராட்சியில் இருந்து 01.10.2010 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி மக்கள் தொகை 2011 கணக்கெடுப்பின்படி 30274 ஆகும். இந்நகராட்சியில் 18 வார்டுகளில் 22 உட்கடை கிராமங்களை உள்ளடக்கி 13.05 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டதாகும், இந்நகராட்சிக்கென நகரின் மத்தியில் புல எண்.234/1ல் சுமார் 11.63.0 ஹக்டெர் பரப்பளவில் நகராட்சிக்கு சொந்தமான சின்னக்குளம் அமைந்துள்ளது. இந்நகராட்சி பகுதியில் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் சுற்றுலா மையங்கள் மற்றும் பூங்காக்கள் ஏதும் இல்லாத நிலையில் மேற்படி குளத்தில் மேற்கு மேட்டுப்பகுதியாகவும், சமதளப்பகுதியாகவும் உள்ளது. எனவே மேற்படி பகுதியில் நகராட்சி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் குழந்தைகள் விளையாடும் இடம் மற்றும் செயற்கை நீரூற்று விளக்கு வசதிகளுடன் கொண்ட பூங்கா அமைத்திட வேண்டியுள்ளது.

மேலும் சின்னக்குளத்தில் நகரின் தாராபுரம் சாலை மற்றும் திண்டுக்கல் பழனி தேசிய நெடுஞ்சாலைக்கு உட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்ளில் இருந்து வெளியேறும் கழிவுகள் சின்னக்குளத்திலேயே கலந்து பொதுசுகாதாரக் சீர்கேட்டினை ஏற்படுத்திவிடுகிறது. நகரின் மையப்பகுதியில் சின்னக்குளம் இருப்பதால், அசுத்தமாக காட்சியளிப்பதுடன் சுற்றுச்சூழல் சீர்கேடும் ஏற்பட்டுவிடுகிறது.

எனவே மேற்படி குளத்தில் கழிவுநீர் சேராத வகையில் Interruption and diversion வடிகால் அமைத்தும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தும் குளத்தினை தூர்வாரி மழை நீரை சேகாரம் செய்திடவும், குளத்தின் கரையில் நடைபாதை பூங்கா அலங்கார மின் விளக்குகள் மற்றும் செயற்கை நீரூற்றுடன் சிறுவர் விளையாடுமிடம் அமைத்து சுற்றுச்சுழலை மேம்படுத்திடவும், தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 700.00 இலட்சத்தினை ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டம் 2018–2019ன் கீழ் முழு மானியமாக வழங்க தயார் செய்யப்பட்ட திட்ட அறிக்கை மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி பொதுமக்களின் நலன் கருதி சின்னக்குளத்தினை மேம்படுத்தும் பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.700.00 இலட்சத்தினை முழு மானியமாக வழங்கி, பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளித்து உரிய உத்திரவு பிறபிக்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு திட்ட அறிக்கை சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 123**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 8**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் குடிநீர் பைப்லைன் இல்லாத வார்டு எண்.1 கே.கே.நகர், ஆர்.எஸ்.பி நகர், வார்டு எண்.5 திடீர் நகர், ஜெ.ஜெ.நகர் பகுதிகளி 1000 வீடுகளுக்கு மேல் உள்ளது. மேற்படி பகுதிகளில் இது நாள் வரையிலும் டிப்பர் லாரியில் இரண்டு 3000 லிட்டர் சின்டெக்ஸ் டேங்க் வைத்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. அடிக்கடி டேங்க் மற்றும் கேட் வால்வு பழுது ஏற்பட்டு குடிநீர் விநியோக பணி தோய்வு ஏற்படுவதால் 8000 லிட்டர் கொள்ளளவு கொண்ட வாட்டர் டேங்க்காக மாற்றம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ளவும், நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 124**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்: 9</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016—ன்படி முறையாக தரம் பிரித்து மக்கும் குப்பை உரமாகவும், மறுசுழற்சி உள்ள கழிவுகளை மறுசுழற்சிக்கு வழங்கவும், பயனற்ற கழிவுகளை சிமெண்ட் தயாரிப்பு நிறுவனத்திற்கு அனுப்பவும், முறையான பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு போதிய பணியாட்கள் இல்லாத நிலையில் அரசாணை MS(நிலை—1) எண். 101/1997—ன்படி துப்புரவு பணி, வாகனம், பேருந்து நிலையம், நகராட்சி பொது கழிப்பிடம் மற்றும் மார்க்கெட் பகுதியில் பராமரிப்பு செய்து திடக்கழிவு அப்புறப்படுத்த பணியாளர்கள் கணக்கீடு செய்து நிரந்தர துப்புரவு பணியாட்கள் 47 நபர்கள் இல்லாது தனியார் மயமாக்கல் முறையில் 120 பணியாட்கள் அனுமதிக்க வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை ந.க.எண். நாள். அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ள நிலையில், தற்போது 74 பணியாட்கள்(5 மகளிர் சுய உதவிக்குழு) கொண்டு துப்புரவு பணி செய்து வரப்படுகிறது. இந்நிலையில் திடக்கழிவுகள் தரம் பிரித்து பேரல் கம்போஸ்ட் செய்யப்பட்டுள்ளதால், பணியாட்கள் பற்றாக்குறையாக உள்ளதால், 2013—ல் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் தனியார் மயமாக்கல் முறைக்கு 116 பணியாட்களுக்கு அனுமதி வழங்கியுள்ளார். தற்போது 120 பணியாட்கள் அனுமதிக்க வேண்டிய கடிதம் அனுப்பப்பட்டுள்ள நிலையில் பழைய உத்தரவின்படியே 116 பணியாட்கள் பணி செய்ய அனுமதிக்கும்பட்சத்தில் திடக்கழிவு முறையாக கையாளப்பட்டு நாள் ஒன்றுக்கு 8 முதல் 11 மெட்ரிக் டன் வரை மக்கும் குப்பைகள் உரமாக மாற்றம் செய்ய இயலும் 2 முதல் 3 டன் மறுசுழற்சி கழிவுகள் மறுசுழற்சிக்கு அனுப்பப்படும். 1 முதல் 2 டன் வரை மறு சுழற்சி செய்ய இயலாத கழிவுகளை சிமெண்ட் தயார் செய்யும் நிறுவனத்திற்கு எரிபொருளுக்காக அனுப்பப்படும். மீதமுள்ள 1 முதல் 2 டன் வரை மண் கழிவுகளை பள்ள மேடுகள் சரி செய்ய பயன்படுத்தப்படுவதன் மூலம் 15 முதல் 18 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் முழுமையாக கையாளப்படும். ஏனவே 116 பணியாட்களை வீடு வீடாக சென்று திடக்கழிவு சேகரம் செய்து தரம் பிரித்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மேற்கண்ட 116 பணியாட்களை மகளிர் சுய உதவிக்குழு மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடமிருந்து முறையான உத்திரவு பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி அனுமதிக்கும் காலம் வரை பழைய உத்திரவின்படி தேவையான பணியாட்களை மகளிர் சுய உதவிக்குழுக்களை பணியமர்த்திக்கொள்ள தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதாரப் பணியின் அவசியம் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ளவும், நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 125**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்: 10</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு பரப்பலாறு நீர் ஆதாரத்தினைக் கொண்டு விருப்பாட்சி தலையூற்று குடிநீர் திட்டம் மற்றும் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் முதலானவைகள் செயல்பாட்டில் உள்ளது. இருப்பினும் நகர் பொதுமக்களின் தினசரி குறைந்தபட்ச குடிநீரினை பூர்த்தி செய்ய இயலாத நிலையிலும் எதிர்கால நகர விரிவாக்கம் மற்றும் மக்கள் தொகை பெருக்கத்திற்கேற்ப புதிய குடிநீர் ஆதாரத்தை தோற்றுவிக்கும் பொருட்டும், பரப்பலாறு அணையினை நீராதாரமாக கொண்டு கூடுதல் குடிநீர் திட்டம் வகுக்கவும், நகர் பகுதிக்குள் கூடுதல் மேல் நிலைத் தொட்டிகள் அமைத்து 1 முதல் 18 வார்டுகளுக்கும், சீரான குடிநீர் விநியோகிக்கும் பொருட்டு மெயின் மற்றும் பகிர்மான குழாய்கள் பதிக்க ஆய்வுகள் மேற்கொண்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம், சென்னைக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், மேற்படி நிறுவனத்திடமிருந்து 29.06.2018 ஆம் நாள் வரப்பெற்ற கடிதத்தில் குடிநீர் ஆதாராத்தை மேம்படுத்துவதற்கும் நகர் பகுதிக்குள் மேல் நிலை தொட்டிகள் அமைத்து குடிநீர் விநியோகத்தினை சீர் செய்யும் பொருட்டு புதிய குடிநீர் ஆதாரம், மேல் நிலைத் தொட்டிகள் மற்றும் 18 வார்டுகளுக்கும், பிரதான மெயின் மற்றும் பகிர்மான குழாய்கள் அமைத்து சீரான முறையில் குடிநீர் வழங்க

மேம்பாட்டுப் பணிகளுக்கான திட்ட அறிக்கை தயார் செய்து வழங்கவும், ஆலோசனை கட்டணம் உள்பட சேவை வரி நீங்கலாக ரூ.40.00 இலட்சம் வழங்க கேட்டு வரப்பெற்ற கடிதம் தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும், முடிவுக்கும்,

<u>**அலுவலக குறிப்பு**</u>

1. அனுமதிக்கலாம்.
2. நகரின் விரிவாக்கம் மற்றும் எதிர் கால மக்கள் தொகை பெருக்கத்திற்கேற்ப குடிநீர் ஆதாரத்தை மேம்படுத்துவது அவசியமானதாக உள்ளதாலும், திட்ட அறிக்கை தயார் செய்ய மேற்படி நிறுவனம் ஆய்வறிக்கைக்கு 15 நாட்கள் 30% தொகை, ஆரம்பகட்ட திட்ட அறிக்கை, வரைவு, மதிப்பீடு மற்றும் வரைபடங்கள் பணிக்காக 90 நாட்கள் 50% தொகை மற்றும் இறுதிகட்ட பணிகள் 120 நாட்கள் 20% முதலான தொகைகளை வழங்கவும், ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தி மேற்படி பணிகள் நிறுவனம் மூலம் ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 126**

அனுமதிக்கப்பட்டது.

<u>**பொருள்:11**</u>

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் சேகாரமாகியுள்ள தினசரி நாளிதழ்களை கழிவு செய்யும் பொருட்டு 16.05.2018–ல் பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு யாரும் வரப்பெறாத நிலையில் மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 22.06.2018–ல் கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறாத நிலையில் பொது ஏலம் மூலம் கோரப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத் தொகை அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஏலத் தொகை |
|---|---|---|
| 1 | திரு.ஜி.சிவக்குமார் | 3320/– |
| 2 | திரு.பி.பால்ராஜ் | 3300/– |

<u>**அலுவலகக்குறிப்பு :**</u>

1. அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் இரண்டு பொது ஏலங்களில் இரண்டாவது நடைபெற்ற பொது ஏலத்தில் வரிசை எண்.1–ல் உள்ள உயர்ந்தபட்ச ஏலத் தொகையை அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 127**

அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் : 12</u>

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.12981/2018/இ3 நாள். 27.06.2018 –ன்படி இந்நகராட்சிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2018–2019–ன் கீழ் (TURIP) ரூ.1500.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் அமைக்கும் பணிக்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்ட மான்ய நிதி | – | ரூ.570.00 |
| 2. மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மான்ய நிதி | – | ரூ.450.00 |
| 3. மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி | – | ரூ.330.00 |
| 4. நகராட்சி பங்களிப்புத் தொகை | – | ரூ.150.00 |
| | | ரூ.1500.00 |

மேற்காணும் திட்ட மான்ய நிதி மற்றும் இந்நகராட்சி பங்களிப்பு நிதி ( 13.50 கோடி + 1.50 கோடி ) சேர்த்து ஆகமொத்தம் ரூ.1500.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டினை ஏற்று கீழ்காணும் பகுதிகளில் சாலைப் பணிகள் மேற்கொள்ள பணிகள் தேர்வு செய்தது தனி அலுவலரின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | சிப்பம் எண் | வார்டு எண் | பணிகள் மேற்கொள்ளும் இடம் | சாலையின் வகை | மதிப்பீட்டுக் தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | 1 | கே.கே.நகர் முதல் சங்குப்பிள்ளை புதுார் வரை | தார்சாலை | 200.00 |
| | | 1 | செல்லப்ப கவுண்டன் புதுார் | | |
| | | 2 | பெரியாஞ்செட்டிபட்டி, | | |
| | | 2 | இருளகுடும்பன்பட்டி சாலை, | | |
| | | 4 | சம்சுதீன் காலனி, | | |
| | | 4 | சொசைட்டி காலனியில் மெயின் சாலை | | |
| | | 4 | சொசைட்டி காலனியில் குறுக்கு சாலை | | |
| | | 4 | அண்ணா நகர் | | |
| | | 5 | காந்திநகர் | பேவர் பிளாக் | |
| | | 1 | ஆர்.எஸ்.பி நகர் | | |
| 2 | 2 | 1 | சி.எப் காலனி | தார்சாலை | 200.00 |
| | | 1 | வசந்த நகர், | | |
| | | 3 | தீயணைப்பு நிலையம் குறுக்கு தெரு, | | |
| | | 3 | டிரஸ்சரி காலனி குறுக்கு தெரு | | |
| | | 3 | முல்லை நகர் குறுக்கு தெரு, | | |
| | | 1 | பகவான் கோவில் தெரு | பேவர் பிளாக் | |
| 3 | 3 | 5 | காந்தி நகர் மெயின் | தார்சாலை | 200.00 |
| | | 6 | சாஸ்தா நகர் மெயின் சாலை | | |
| | | 8 | நல்லக்கவுண்டன் நகர், | | |
| | | 9 | திருவள்ளுவர் மெயின் மற்றும் குறுக்கு தெரு | | |
| | | 7 | ஐய்யப்பன் கேயில் முதல் விஸ்வநாத நகர் மேல்நிலை தொட்டி சாலை முடிய | | |
| | | 5 | காந்தி நகர் மற்றும் குறுக்கு தெரு | பேவர் பிளாக் | |
| 4 | 4 | 8 | பத்திர பதிவு அலுவலகம் சாலை மற்றும் கைராசி நகர் முதல் தும்மிச்சம்பட்டி புதுார் வரை | தார்சாலை | 200.00 |
| | | 12 | பத்திர பதிவு அலுலவகம் முதல் நாயக்கனுார் சாலை வரை | | |
| | | 9 | தென்றல் நகர் மெயின் மற்றும் குறுக்குதெரு, | | |
| | | 11 | மேட்டுப்பட்டி | பேவர்பிளாக் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | 5 | 10 | வ.உ.சி நகர் | தார்சாலை | 200.00 |
| | | 10 | பாரி மெஸ் குறுக்கு தெரு | | |
| | | 10 | முருகன் திருமண மண்டபம் சாலை | | |
| | | 10 | தாராபுரம் சாலை மேற்கு பகுதி | பேவர் பிளாக் | |
| 6 | 6 | 10 | சின்னக்குளம் முதல் தீயணைப்பு நிலையம் சாலை வரை | தார்சாலை | 200.00 |
| | | 11 | மேட்டுப்பட்டி மேற்கு பகுதி | | |
| | | 12 | கஸ்தூரி நகர் குறுக்கு தெரு | | |
| | | 12 | தும்மிச்சம்பட்டி புதுார் | | |
| | | 17 | அணைப்பட்டி | | |
| | | 18 | பொன்னகரம் | பேவர் பிளாக் | |
| 7 | 7 | 17 | ஏ.பி.பி. நகர் | தார்சாலை | 200.00 |
| | | 18 | குறிஞ்சி நகர் குறுக்கு தெரு | | |
| | | 18 | தாராபுரம் சாலை முதல் குறிஞ்சி நகர் வரை | | |
| | | 18 | ஆத்துார் மெயின் மற்றும் குறுக்கு தெரு | | |
| | | 18 | பொன்னகரம்மெயின் மற்றும் குறுக்கு தெரு | | |
| | | 17 | ஏ.பி.பி நகர் குறுக்கு தெரு | பேவர் பிளாக் | |
| 8 | 8 | 17 | பொன்னகரம் மெயின் மற்றும் குறுக்கு சாலை | தார்சாலை | 100.00 |
| | | 17 | பழனி கவுண்டன் புதுார் முதல் சீத்தப்பட்டி சாலை | | |

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் திட்டப் பணியில் மான்யமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.13.50 கோடியுடன் இந்நகராட்சி பங்களிப்புத் தொகையான ரூ. 1.50 கோடியினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஈடு செய்து பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 128**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்:13</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கென பொதுசுகாதார டிராக்டர் TN 57 R 0281 மற்றும் TN 57 U5267 ஆகிய இரு வாகனங்கள் பராமரிப்பு பணி எதுவும் மேற்கொள்ளாதது கடந்த மூன்று வருடங்களாக இயக்கப்பட்டு வருகிறது. வாகனத்தில் ஆயில் சிந்தியும் இழுவை திறன் குறைந்தும் வாகனம் தொடர்ந்து இயக்க முடியாத நிலையில் ஏற்படுவதால் அரசு சார்பு நிறுவனமான அக்ரோ இன்ஜினியரிங் & கே ஆப்ரேட்டிவ் சர்வீஸ், நிறுவனத்தில் பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 3.00 இலட்சத்திற்கு தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார டிராக்டர் வாகன பராமரிப்பு செய்ய ஆகும் செலவினத் தொகையை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 129**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்:14**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலையத்தில் உள்ள புதிய கடை எண்.11 மற்றும் 14 ஆகிய 2017–18 ஆம் ஆண்டுக்கான வாடகை தொகை நிலுவை காரணமாக உரிமம் ரத்து செய்யப்பட்டு மன்றத் தீர்மான எண்.61 நாள்.28.03.2018–ல் தனிஅலுவலர் அவர்களால் டேவணி தொகை பரிமுதல் செய்து ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி அளித்ததை தொடர்ந்து மேற்படி நாளில் கடைகளுக்கு செய்தி மக்கள் தொடர்பு துறை திண்டுக்கல் மூலம் 18.04.2018–ம் நாளிலும் அதனை தொடர்ந்து 02.05.2018, 01.06.2018 மேற்படி நாளில் நடைபெற்ற பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறாத நிலையில் பொது ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. இதனை தொடர்ந்து மறு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் பொது ஏலம் மூலம் கோரப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத் தொகை அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | கடை எண் | ஏலதாரர் பெயர் | ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 11 | திரு.ஆர்.முருகன் | 5500/– |
| 2 | 14 | திரு.ஆர்.முருகன் | 8500/– |

**அலுவலகக்குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் இரண்டு கடைகளுக்கும் நடைபெற்ற மூன்று அழைப்புகளில் ஏலம் கோர யாரும் முன்வராத நிலையில், நான்காவது அழைப்பில் ஏலம் கோரப்பட்டுள்ளதால், இந்நகராட்சியின் வருவாயினை கருதி உயர்ந்தபட்ச ஏலத்தொகையினை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்

**தீர்மான எண். 130**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் – 15**

ஒட்டன்சத்திரம் நகராட்சி சின்னக்குளம் பகுதியில் நுண் உரம் தயாரிப்பு கூடம் கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. அப்பகுதியில் உள்ள மண் முழுவதும் குப்பை கூலங்களால் நிரப்பப்பட்டுள்ளதால் மண்ணிற்கு போதிய உறுதி தன்மை இல்லை. இந்நிலையில் அண்ணா பல்கலைகழகம் திண்டுக்கல், மூலம் மண் பரிசோதனை செய்து தயாரிக்கும் திறன் அளவினை கண்டறிந்து தரத்தினை வடிவமைத்து செய்துதர கோரப்பட்டதில் மண்ணின் உறுதி தன்மை CBR Value மிகவும் குறைவாக உள்ளதால் நுண் உரம் மேற்படி பகுதியில் தொட்டிகள் கட்டினால் தலப்பகுதி இடிந்து இழப்பு ஏற்படும் என்பதால், RCC Flooring அமைக்கும்படி வடிவமைப்பு டிசைன் பெறப்பட்டது. எனவே மேற்தளம் RCC Flooring அமைத்தால்தான் நுண் உரம் தயாரிப்பு கூடம் தளப்பகுதியினை சேகாரம் இல்லமால் கட்ட இயலும் என்பதால் ரூ.9.80 இலட்சத்திற்கான பணிக்கு ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள தீர்மானம் எண்.96 நாள்.31.05.2018 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிகளுக்காக 19.06.2018–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | சபரி கன்ஸ்ட்ரக்சன் | 0.02 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.பி.வீராச்சாமி | 1.69% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1–ல் உள்ள ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து மட்டும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு சபரி கன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்தின் 0.02% மதிப்பீட்டு விலையில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.02 % குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள சபரி கன்ஸ்ட்ரக்சன் நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 131**

அனுமதிக்கப்பட்டது.

இடம். ஒட்டன்சத்திரம்.
நாள். 28.06.2018

தனிஅலுவலர்
மற்றும் ஆணையாளர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி.